நெய்தல் இலக்கிய அமைப்பு
நாகர்கோவில்

## கண்மணி குணசேகரனுக்கு
## சுந்தர ராமசாமி விருது

மூத்த எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் நினைவாக நெய்தல் அமைப்பின் சார்பில் நிறுவப்பட்டுள்ள ‘சுந்தர ராமசாமி விருது’ இவ்வாண்டு முதல் வழங்கப்படுகிறது. 2007ஆம் ஆண்டுக்கான இவ்விருதுக்கு இளம் தலைமுறையில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு. கண்மணி குணசேகரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வாசகர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் முன்வைத்த பரிந்துரைகளின் அடிப்படையில் பாவண்ணன், சுகுமாரன், அரவிந்தன் ஆகியோர் கொண்ட நடுவர் குழு கண்மணி குணசேகரனை விருதுக்குரியவராகத் தேர்ந்தெடுத்தது. ரூபாய் 10,000 ரொக்கத் தொகை, சான்றிதழ் அடங்கியது இவ்விருது.

2007 அக்டோபர் 14ஆம் தேதி நாகர்கோவிலில் நடைபெறும் விழாவில் எழுத்தாளர் திரு. நாஞ்சில்நாடன் விருதை வழங்குவார்.

இச்செய்தியைத் தங்கள் ஊடகத்தில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,
நெய்தல் கிருஷ்ணன்
சரவணா இல்லம்
51 ஈத்தாமொழி சாலை
கோட்டாறு
நாகர்கோவில் 629 002
அலைபேசி: 9443153314